12.02.2024

*OS 329/2022*

**வா.சா.1 அருள்**

**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

24.05.2007ம் தேதிய வழக்கு சொத்திற்கான வாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. 01.04.2018 மற்றும் 01.03.2019ம் தேதிய வாடகை ஒப்பந்த பத்திரங்கள் பிரதிவாதியிடம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. வாதி மகளின் பாரத ஸ்டேட் வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.11.2019ம் தேதிய பிரதிவாதி, வாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அசல் வா.சா.ஆ.4. 10.12.2019ம் தேதி வாதி அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.5. அதை பிரதிவாதி வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை வா.சா.ஆ.6. 01.02.2020ம் தேதி மதுரை அண்ணாநகர் காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகார் மனு வா.சா.ஆ.7. 03.03.2020ம் தேதி மதுரை மாநகர காவல்ஆணையரிடம் நான் கொடுத்த மனு நகல் வா.சா.ஆ.8. 07.03.2020ம் தேதி மதுரை அண்ணாநகர் காவல் உதவி ஆணையரிடமிருந்து விசாரணைக்கு அனுப்பபட்ட அழைப்பாணை வா.சா.ஆ.9. அ.வ.எண்.15/2020 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேலூரில் பிரதிவாதி தனது பொது அதிகார முகவர் மூலம் தாக்கல் செய்த வழக்கின் வழக்குரை வா.சா.ஆ.10. அ.வ.எண்.15/2020 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேலூரில் பிரதிவாதி தனது பொது அதிகார முகவர் மூலம் தாக்கல் செய்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை வா.சா.ஆ.11. 08.09.2021ம் தேதி மதுரை மாநகராட்சியில் 2021-2022 ஆண்டிற்கு செலுத்தப்பட்ட வரி ரசீது வா.சா.ஆ.12. 01.10.2022ம் தேதி வாதி, பிரதிவாதி குடியிருந்து வரும் முகவரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு திரும்பி வந்த அஞ்சல் உறை வா.சா.ஆ.13. 01.10.2022ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.14. 01.10.2022ம் தேதிய அஞ்சல் ரசீதுகள் வா.சா.ஆ.15. 03.10.2022ம் தேதிய ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.16. 31.10.2022ம் தேதி பிரதிவாதி, வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.17.

குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்-S.கணேசன்

சார்பு நீதிபதி

மேலூர்